# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,217—1960 ඔක්තෝබර් 22 වැනි සෙනසුරාදා—22.10.1960**

12,217 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எப்.சீ/வீ–எஸ்.எப் 5–(5). அரிசி.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) சதரசிங்ஹகெ டொன் சுகததாச ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ம் திகதி எப்.சீ/வீ–எஸ்.எப்–5 (4) என இலக்கமிடப்பட்டு 11,829 ம் இலக்கங்கொண்ட 1959 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 ம் திகதி வெளிவந்த விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக், கட்டுப்பாட்டுக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம் பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை ஒரு நிகர, அந்தர் அரிசிக்கு ஆகக்கூடிய மொத்த விலையாக அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்வெல்லைகளுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக ஒருவரும் விற்பனை செய்யக் கூடாது.

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்திகளில் குறிக்கப்பட்டிருக்கும் விலைகளை ஒரு நிகர இருத்தல் அரிசிக்கு ஆகக் கூடிய சில்லறை விலையாக அதே அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். இவ்வெல்லைகளுக்குள் இவ்விலைகளுக்குக் கூடுதலாக ஒருவரும் விற்பனை செய்யக் கூடாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வகையான அரிசியும் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு நிகர அந்தருக்குக் கூடிய அரிசியை ஒரு தடவை விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) எவ்வித விற்பனையும் ஒரு நிகர அந்தருக்குக் குறைவாக பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும்.

(5) அரிசியோடு வேறு எந்தப் பொருளையும் கலந்து ஒருவரும் விற்றலாகாது.

(6) எவ்வகையான அரிசியும் விற்கப்படுமிடத்து அவ்வாறு விற்கப்படும் அரிசியைச் சுற்றிக் கொடுக்கும் பொருள் அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள், தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் அரிசி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகும்.

(9) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள் மொத்தமாகவும், சில்லறையாகவும் அரிசி விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அளவு ;

(இ) விற்கப்பட்ட அரிசியின் தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குக் கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டீ. சுகததாச,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

1 ம் அட்டவணை

| 1 ம் பத்தி எல்லைகள் | 2 ம் பத்தி ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக் கூடிய மொத்த விலை ரூ. ச. |
|---|---|
| 1. (கொழும்பு மாநகர எல்லைகள் தவிர்ந்த) கொழும்புக் காரியாதிகாரியின் பிரிவு.. | 13 46½ |
| 2. ஹப்பிற்றிக்கம் கோருளை காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) மீரிகம | 13 48½ |
| (ஆ) கந்தலம | 13 52½ |
| (இ) கலாஎலியா | 13 55½ |
| (ஈ) பந்துருகொட | 13 48½ |
| 3. சல்பிற்றிக் கோருளை காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) மொறட்டுவ | 13 55½ |
| (ஆ) பிலியந்தலை | 13 63½ |
| (இ) பொல்கஸ்ஸோவிட்ட | 13 70½ |
| 4. சியன்னே கோருளை கிழக்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) நித்தம்புவ | 13 56½ |
| (ஆ) அத்தனகல | 13 56½ |
| (இ) உருப்பொல | 13 65½ |
| (ஈ) நிவித்திகம்மன | 13 65½ |
| (உ) கிரிந்திவெல | 13 69½ |
| (ஊ) ரதவானை | 13 65½. |
| (எ) பூகொட | 13 72½ |
| (ஏ) பெப்பிலியாவெல | 13 72½ |
| (ஐ) டெக்கட்டன | 13 68½ |
| (ஒ) டொம்பே | 13 68½ |
| (ஓ) கிரிதர | 13 72½ |
| (ஔ) உட மாப்பிட்டிகம | 13 72½ |
| (ஃ) வெல்கம | 13 72½ |
| (அஅ) கப்புகொட | 13 72½ |
| (ஆஆ) ஓவிட்டிகம | 13 68½ |
| 5. சியன்னே கோருளை மேற்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) ஹிரிப்பிட்டிய | 13 49½ |
| (ஆ) யக்கலை | 13 54½ |
| (இ) இம்புல்கொட | 13 60½ |
| (ஈ) கிரிவல, உடுப்பில | 13 64½ |
| (உ) பட்டிவில | 13 50½ |
| (ஊ) ஹேனகம, மல்வதுஹிரிபிட்டிய | 13 67½ |
| (எ) திஹாரிய, வீதியவத்தை | 13 60½ |
| (ஏ) கடவத்தை | 13 50½ |
| (ஐ) வெதமுல்லை | 13 41½ |
| (ஒ) தல்வத்து, ஹெனபிட்ட | 13 45½ |
| (ஓ) களனிய | 13 43½ |
| (ஔ) வெயங்கொட | 13 49½ |
| 6. அளுத்குறு கோருளை தெற்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) பமுனுகம | 13 67½ |
| (ஆ) திம்பிரிகஸ்யாய | 13 50½ |
| (இ) களனிய | 13 53½ |
| (ஈ) கந்தானை | 13 67½ |
| (உ) வத்தலை | 13 50½ |
| (ஊ) ஜாயலை | 13 63½ |
| (எ) துடல்லை | 13 67½ |
| (ஏ) தண்டுகம | 13 67½ |
| (ஐ) உடம்பிட | 13 67½ |
| (ஒ) போலத்தை | 13 77½ |
| (ஓ) கம்பஹா | 13 63½ |
| 7. அளுத்குறு கோருளை மேற்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) நீர்கொழும்பு | 13 49½ |
| (ஆ) கொச்சிக்கடை | 13 53½ |
| (இ) கம்பஹா | 13 49½ |
| (ஈ) நெட கமுவா | 13 56½ |
| (உ) கட்டானை | 13 60½ |
| (ஊ) வெலிஹேன | 13 60½ |
| (எ) மினுவங்கொடை | 13 60½ |
| (ஏ) திவுலப்பிட்டிய | 13 67½ |
| (ஐ) பிட்டிப்பன | 13 74½ |
| (ஒ) தலாஹேன | 13 91½ |
| 8. ஹேவாகம் கோருளை காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) அவிஸ்ஸாவெல | 13 86½ |
| (ஆ) வஹ | 13 51½ |
| (இ) ஹன்வல்ல | 13 63½ |
| (ஈ) பாதுக்க | 13 51½ |
| (உ) ஹோமகம | 13 51½ |
| (ஊ) கடுவெல | 13 75½ |

## 2 ம் அட்டவணை

| 1 ம் பத்தி<br>எல்லைகள் | 2 ம் பத்தி<br>நிகர ஒரு இருத்தல் அரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| 1. கொழும்புப் பிரிவு காரியாதிகாரியின் பிரிவு (கொழும்பு மாநகர எல்லைகள் தவிர்ந்த கொழும்புப் பட்டணம்) .. | 0 12½ |
| 2. ஹப்பிற்றிகம் கோருளே காரியாதிகாரியின் பிரிவு .. .. .. .. | 0 12¾ |
| 3. சல்பிற்றிக் கோருளே காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) சல்பிற்றிக் கோருளே (கஹத்தடுவ பேருவ, மற்றேகொடபேருவா, தவிர்ந்த) கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 587, சித்திமுல்ல, சங்கராம .. .. .. | |
| 588, கிரிகம்பமுனுவ, மற்றேகொட .. .. .. | |
| 589, தியகம .. .. .. | 0 12¾ |
| 590, மாகம்மன .. .. .. .. | |
| 591, குடாமடுவ .. .. .. .. | |
| (ஆ) கஹத்துடுவ பேருவா, மற்றேகொடபேருவா கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 587, சித்திமுல்ல, சங்கராம .. .. .. | |
| 588, கிரிகம்பமுனுவ, மற்றேகொட .. .. .. | |
| 589, தியகம .. .. .. | 0 13 |
| 590, மாகம்மன .. .. .. .. | |
| 591, குடாமடுவ .. .. .. .. | |
| 4. சியன்னே கோருளே கிழக்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) சியன்னே கோருளே கிழக்கு வெல்கம பேருவா, வேக்கே பேருவா தவிர்ந்த கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 379 மித்தரிகல, ஹேனகம .. .. .. .. | 0 13½ |
| (ஆ) வெல்கம பேருவா வேக்கே பேருவா கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 379 மித்திரிகல, ஹேனகம .. .. .. .. .. | 0 13 |
| 5. சியன்னே கோருளே மேற்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) சியன்னே கோருளே மேற்கு (மகர பேருவாவும், டலுகமவும், களனிய பேருவாவும், பியகம பேருவாவும் தவிர்ந்த) .. .. .. .. .. | 0 12¾ |
| (ஆ) மகர பேருவாவும், டலுகம பேருவாவும் களனிய பேருவாவும், பியகம பேருவாவும்.. .. | 0 12½ |
| 6. அளுத்குறு கோருளே தெற்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) (பேலியாகொட பேருவா தவிர்ந்த) அளுத்குறு கோருளே தெற்கு .. .. .. | 0 12¾ |
| (ஆ) பேலியாகொட பேருவா .. .. .. .. .. | 0 12½ |
| 7. அளுத்குறு கோருளே வடக்கு காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) அளுத்குறு கோருளே வடக்கு தலேஹேன பலாத்த, கொடகஹபலாத்த கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 79 உடுகொட கெதர, வல்பிட ஹிராலு கெதர, வரதல அகல்ல கெதர, மூக்கலங்கெதர | |
| 80 வெலங்கன, வேகட, குனுமட மல்லவ கெதர, தலுபத கெதர, மாபோத்தல பலாத்த கிராமாதிகாரியின் பகுதி இலக்கம் .. .. | 0 12¾ |
| 98 மாபோத்தல, வித்தானமுல்ல .. .. .. | |
| (ஆ) தல்ஹேன பலாத்த, கொடகஹபலாத்த கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 79 உடுகொட கெதர, வல்பிட ஹிராலு கெதர, வரதல அகலகெதர, மூக்கலங்கெதர | |
| 80 வலங்கன, வேக்கட, குனுமட, மல்லவ கெதர, டலுபத்கெதர, மாபோத்தல பலாத்தா கிராமாதிகாரியின் இலக்கம் .. .. .. | 0 13 |
| 98 மாபோத்தல, வித்தானமுல்ல .. .. .. | |
| 8. ஹேவாகம் கோருளே காரியாதிகாரியின் பிரிவு— | |
| (அ) ஹேவாகம் கோருளே, ரனல பேருவா, முல்லேரியா, பேருவா தவிர்ந்த கிராமாதிகாரியின் பிரிவு இலக்கம்— | |
| 429 எஸ்வத்தை, ஹின்குராகல .. .. .. | 0 12¾ |
| 431 புவக்பிட்டிய கொஸ்கம பேருவா .. .. .. | |
| (ஆ) ரனல பேருவா, முல்லேரியா பேருவாவின் கிராமாதிகாரியின் இலக்கம்— | |
| 429 எஸ்வத்தை, ஹின்குராகல .. .. .. | 0 13 |
| 431 புவக்பிட்டிய கொஸ்கம பேருவா .. .. .. | |

**குறிப்பு**—(1) இவ்விலைகள் அரிசி விற்பனை செய்ய வேண்டுமென குறிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ் விலைகளுக்குக் கூடுதலாக விற்பனை செய்யலாகாது.

(2) ஒரு நிகர அந்தருக்குக் கூடிய அல்லது குறைந்த தொகையை மொத்த விலைக்கு விற்கும்பொழுது அதன் ஆகக்கூடிய விலையை மேலே குறித்த ஆகக்கூடிய மொத்த விலையின் பிரகாரம் அவற்றிற்குத்தக பிரித்துக் கணக்கிடப்பட வேண்டும்.

10–649.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது